முருகப்பெருமான் துணை

**மகான் நம்மாழ்வார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**13.06.2021**, ஞாயிற்றுக்கிழமை

1. ஆறுமுக சக்தியே அரங்கா
   ஆறுதலாய் உலக மக்களுக்கு
   மாறுதல் தரவந்த தேசிகா
   மாதவசியே உன் பெருமை கூறி
2. கூறியே யோகபிரசன்ன ஆசி
   குறைவிலா பிலவ விடை திங்கள்
   கருதியே முப்பான்திகதி கதிர்வாரம்
   (பிலவ வருடம் வைகாசி மாதம் 30ம் நாள், **13.06.2021** ஞாயிற்றுக்கிழமை)
   கண்டுரைப்பேன் நம்மாழ்வார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
   உண்மை பொருள் அறியச் செய்யும்
   ஞானதேசிகன் வழிகள் தன்னை
   ஞானமாக மக்கள் ஏற்றுவர
4. வருகவே மக்களின் தேடல்
   வள்ளல் தன்மை கொண்டதாக
   முருகப்பெருமான் தயவை வேண்டும்
   முழுமை ஞானம் உடையதாக மாறி
5. மாறியே உலகம் எங்கிலும்
   மனிதர்கள் மகான்கள் ஆகி
   கூறிட சேவைகள் பெருகும்
   குறிப்பாக தன்னல குணக்கேடு விலகி
6. விலகி விந்தை பிறக்கும்
   விதி வெல்லும் சக்தி கூடும்
   பழக எளிமை குணம் கூடி
   பரோபகார சிந்தை வளரும்
7. வளரவே எங்கும் தர்மம்
   வந்தடையும் எதிலும் சன்மார்க்கம்
   தளரா போக்கும்திடமும் கூடும்
   தவசி அரங்கன் துணை கொண்ட மக்களாய்
8. மக்களாய் உலகோர் சிறந்து
   மரணம் வெல்லும் சக்தி
   தேக்கமின்றி அரங்கன் ஆசியால்
   திருவருளாகக் கூடி இனிதே
9. இனிதே மாற்றம் காணும்
   எல்லாத் துன்பமும் விலகும்
   கனிவேலன் வழிபாடு பெருக
   கலியின் கட்டங்கள் அகன்று

10. அகன்று எங்கும் பாதுகாப்பு
அமைதி வாழ்வு நிலை ஆகி
செகமெல்லாம் மக்களிடை
சிறப்பும் மதிப்பும் பெருகி

11. பெருகியே கலித்துன்பம் இல்லா
பேரானந்த ஞானயுகமாகும்
முருகப் பெருமான் வழிபாடு கூடிட
முழுமையான மாற்றம் சடுதிகாணும்
யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–